**MARUDHAR KESARI JAIN COLLEG FOR WOMEN, VANIYAMBADI**

**PG & RESEARCH DEPARTMENT OF TAMIL**

**e-Notes (Study Material)**

**I MA TAMIL**

**CORE COURSE : பக்திஇலக்கியம்** **CODE : 24PTAC21**

## Unit 3 – காரைக்கால் அம்மையார், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர்

## Learning Objectives

தமிழின் பக்தி இலக்கிய வரலாற்றையும் வளத்தையும் அறிதல்.

சைவ இலக்கியங்கள் வழி இலக்கிய நயங்களையும் பக்தி போக்குகளையும் அறிதல்.

வைணவ இலக்கியங்களின் வலி இலக்கிய நயங்களையும் பக்தி போக்குகளையும் அறிதல்.

பிற்கால பக்தி இலக்கியப் போக்கினை உணரும் வகையில் அருணகிரிநாதர் தாயுமானவர் ராமலிங்க அடிகளார் ஆகியோரின் ஆளுமைகளை கண்டறிதல்.

இஸ்லாமின் கிருத்துவ பக்தி இலக்கிய போக்கை உலக சமயப் போக்கு நிலைப்பாடல் வழி கற்றல்.

## Course Outcomes

வைணவ இலக்கியங்களின் இலக்கியக் கருத்துக்களையும் யாப்பின் சிறப்பு அம்சங்களையும் அறிதல்.

**OUTCOMES**

**பெரியாழ்வார், நம்மாழ்வார், ஆண்டாள், குலசேகர ஆழ்வார்**

- பெரியாழ்வார் மூன்றாம் திரு மொழி மாணிக்கம் கட்டி முதல் 10 பாடல்கள்

- நம்மாழ்வார் மூன்றாம் திருமொழி விற்பெரவிழவும் எனத் தொடங்கும் பாடல் முதல் பத்து பாடல்கள்
- ஆண்டாள் நாச்சியார் திருமொழி 20 பாடல்கள் (தையொரு திங்களும் முதல் 20 பாடல்கள்)
- குலசேகர ஆழ்வார் - ஆறாம் திருமுறை - பெருமாள் திருமொழி - ஏர் மலர் பூங்குழல் - முதல் 10 பாடல்கள்

## பெரியாழ்வார் மூன்றாம் திருமொழி.

**பெரியாழ்வார் குறிப்பு:**

விஷ்ணுசித்தர் என்றும் அழைக்கப்படும் பெரியாழ்வார் ( கி.பி. 9 ஆம் நூற்றாண்டு ), தென்னிந்தியாவின் பன்னிரண்டு ஆழ்வார் துறவிகளில் ஒருவராகவும் , இந்து மதத்தின் வைணவ மரபில் இணைந்ததற்காக அறியப்பட்டவராகவும் இருந்தார். அவர் ஆண்டாளின் வளர்ப்புத் தந்தை ஆவார் . கோதை என்றும் அழைக்கப்படும் ஆண்டாள், ஒரே பெண் ஆழ்வார் ஆவார், மேலும் ஸ்ரீ வைணவ மதத்தின் படி பூதேவியின் அவதாரமாகக் கருதப்படுகிறார் .

நாலாயிரம் கற்போம்' பத்தித் தொடரில் நான்காவது பகுதி இது. பெரியாழ்வார் திருமொழியின் முதல் பத்தின் மூன்றாம் திருமொழி

இந்த 'மாணிக்கம் கட்டி வயிரம் இடைகட்டி' என்று தொடங்கும் பத்துப் பாசுரங்கள்.

1.இந்தப் பத்துப் பாசுரங்களில் திருவாய்ப்பாடியில் எம்பெருமான் கண்ணன் பிறந்திருந்த போது அவனை யசோதை தாலாட்டியதைக் கூறுகிறார் பெரியாழ்வார்.

விளக்கம்:

மாணிக்கங்களை இருபுறமும் கட்டி இடையில் வயிரங்களைக் கட்டி மாற்றில்லாத ஆணிப்பொன்னால் செய்த அழகிய சிறிய தொட்டிலை மிகவும் விருப்பமுடன் பிரமன் உனக்காகத் தந்தான்! உன்னுடைய உடைமைகளை இரந்து பெறுவதற்காக குள்ள மாணவனாக வந்த கண்ணனே தாலேலோ! உன்னுடைமைகளான மூவுலகங்களையும் பெற்ற மகிழ்ச்சியில் திரிவிக்கிரமனாக வளர்ந்து உலகங்களை எல்லாம் அளந்தவனே தாலேலோ!

2.உடையார் கனமணியோடு ஒண்மாதளம்பூ

இடைவிரவிக் கோத்த எழில் தெழ்கினோடு

விடையேறு காபாலி ஈசன் விடுதந்தான்

உடையாய் அழேல் அழேல் தாலேலோ!

உலகம் அளந்தானே தாலேலோ!

விளக்கம்:

உன் இடுப்பின் அழகிற்கு ஏற்ற அழகிய ஒலி எழுப்பும் பொன்மணிகளோடு அழகிய பொன் மாதுளம்பூ இடையிடையே விரவிக் கோத்த அரைஞானை, காளை வாகனம் ஏறும் மண்டையோடு ஏந்தியதால் காபாலி என்று பெயர் உடைய ஈசன் அனுப்பிவைத்தான். எம்மை உடைய தலைவனே அழாதே அழாதே தாலேலோ! உலகம் அளந்தவனே தாலேலோ!

3.என் தம்பிரானார் எழில் திருமார்வர்க்கு
சந்தம் அழகிய தாமரைத் தாளர்க்கு
இந்திரன் தானும் எழிலுடைக் கிண்கிணி
தந்துவனாய் நின்றான் தாலேலோ
தாமரைக்கண்ணனே தாலேலோ

என் தலைவனான அழகிய திருமார்பை உடைய, மணமும் விரிவும் நிறமும் அழகிய தாமரையைப் போல் உள்ள திருவடிகளை உடைய உனக்கு மூவுலகங்களுக்கும் தலைவனான இந்திரனும் அழகினை நிலையாக உடைய கிண்கிணியைத் தந்து உன் பெருமையை எண்ணி விலகி நிற்காமலும் உன் எளிமையை எண்ணி அணுகி நிற்காமலும் தகுந்த தொலைவில் உவனாக நின்றான் தாலேலோ! தாமரைக்கண்ணனே தாலேலோ!

அவன் என்று சுட்டும் படி விலகி நிற்கவில்லை. இவன் என்று சுட்டும் படி அணுகி நிற்கவில்லை. உவன் என்று சுட்டும்படி தனக்குத் தகுந்த தொலைவில் இந்திரன் நின்றான்.

4.சங்கின் வலம்புரியும்-
சேவடிக் கிண்கிணியும்
அங்கைச் சரிவளையும்
நாணும் அரைத்தொடரும்

அங்கண்விசும்பில் அமரர்கள் போத்தந்தார்
செங்கண்கருமுகிலே தாலேலோ* தேவகி சிங்கமே தாலோலோ.

இந்த பாசுரத்தில் பெரியாழ்வார்....

விசும்பு என்றால் ஆகாயம்.

ஆகாயத்தில்

"அமரர்கள் உலகில்" வாழும் தேவர்கள்....

வலம்புரிச் சங்கும், ..... அதாவது.... தேவலோகத்தில் சிறப்பாக....எம்பிரானுக்கென்று.....

சங்கு வகையில் இந்த வலம்புரிச்சங்கு விசேஷமானது. விசேஷமானஅவதார புருஷனுக்குவிசேஷ வஸ்துக்களை அல்லவாபரிசளித்தால்!!

பரிசுபொருளுக்கும் ஒரு ஏற்றம்*?!

அவ்வகையில் சிறந்த பரிசாக வலம்புரிச் சங்கும்….

கண்ணபிரான்* திருக்கழல்களுக்கு*

சதங்கை- கலகலவென்று இனிமையாக ஒலிக்கும் (கிண்கிணி) கால் சலங்கைகளும் …

கிருஷ்ணன் நடந்தாலும் காலை அசைத்தாலும் !!

அந்த சதங்கை-நாதம் இனிமையாக….. காதில் ஒலித்து… ஒரு மகிழ்ச்சியை அளிக்கும்.

நம் இல்லங்களில் குழந்தைகள் தண்டை கொலுசு புதிதாக அணிவிக்கும் சமயம் மிகவும் மகிழ்வுடன் அந்த ஒலியை ரசித்தவாறு நடந்து தானும் மகிந்து நம்மையும் மகிழ்விக்கும்….அல்லவா!! அப்படி கிருஷ்ணனை மகிழ்விக்க சேவடிக் கிண்கிணியும்!!

அப்படி ஒரு மகிழ்ச்சி கண்ணபிரானோடு தேவர்களும் அனுபவிக்கும்!!

பொருட்டு சேவடிக்கு கிண்கிணி என்று ஒலிக்கும் சதங்கையும்….

தோளுக்கு கங்கணம்–

“அங்கைச்சரிவளையும்” ….

கைவளையல்களும்…

இடுப்பிற்கு அரைஞாணும் (அரைத்தொடரும்)

தேவர்கள் பரிசாக தந்திருக்கிறார்கள்.
பகவானே அழகு கிருஷ்ண பரமாத்மா அலங்காரப்பிரியனான மகாவிஷ்ணு அல்லவா?

பெருமாள் கோயில்களில் பகவானுக்கு செய்விக்கும் அலங்காரம் மனதை கொள்ளை கொள்ளும் அழகு.
இதை யாரும் மறுக்க முடியாது.

சிவந்த கண்களைக் கொண்ட செங்கண்மாலே! கருமுகிலே!
கருமை வண்ண மேகம் போன்றவனே கண்ணா தாலேலோ தாலாட்டு பாடுகிறோம்.....
தேவகி பெற்ற சிங்கமே தாலோலோ என்று பெரியாழ்வார்
கண்ணனுக்கு தாலாட்டு பாடியருளுகிறார்.

5. எழில் ஆர் திருமாவூருக்கு,ஏற்கும் இவை என்று அழகியே ஐம்பொடையும் ஆரம்பம் கொண்டு வலு இரு கொடையான், வயிச்சிரவணன்வான் பொழுது வானாய் நின்றான் தாழியலோ தூமணி வண்ணனே! காலையிலோ!
வழுவில் கொடையான் வயிச்சி ராவணன்
தொழுதுவனாய் நின்றான் தாலேலோ தூமணிவண்ணனே தாலேலோ.

அழகிய கண்ணனின் திருமார்பில் பிராட்டி அமர்ந்து கொண்டு பகவானுக்கு அழகு- காந்தி- கருணை என்று பகவானது திருக்கல்யாண குணங்களின் ஆதாரமாக விளங்குகிறாள்!!

கௌஸ்துபம் என்ற உயர்ந்த மணி எம்பெருமான் திருமார்பில் ஆபரணாக துவங்குகிறது.

இத்தனை சிறப்பு மிகுந்த அழகிய திருமார்பன் திருமாலுக்கு ஏற்கும்! இவை என்று

...

அழகிய ஆரம்* ஆரமென்றால்- நீண்ட அழகிய மாலை* முத்து மணி போன்ற உயர்ந்த ரத்தினங்கள் கோர்த்த ஆபரணம்.

.. மேலும் அந்த ஆபரணத்தில்....

ஐம்படை என்றால் பகவானின் பஞ்சாயுதங்கள்.... ரத்தினங்களோடு இடையிடையே....

சங்கு, சக்கரம், கதை, வில், வாள்.... குழந்தைக்கு திருஷ்டி படக்கூடாது....

மேலும் பாதுகாப்பு கவசம் பகவானின் ஐம்படையும்*

இவற்றை எல்லாம் அந்த ஆரத்தில் கோர்த்து*

மிகவும் அழகிய ஆபரணமாக ....... பகவானுக்கு அணிவித்து அந்த அழகை கண்ணாரக் கண்டு தரிசித்து “புளகித்து”....

இவை ஏற்கும் என்று எண்ணி எண்ணிப் பார்த்து செய்து ...

குற்றமற்ற

குபேரன்* பரிசு ஆரம்

வழு- என்றால் குற்றம் வழுவில்- வழு+இல்
எனில் குற்றமற்ற!
வயிச்சிரவணன்-

குபேரன்
அழகிய ஐம்படையும் ஆரமும் கொண்டு வந்து எம்பிரானுக்கு* உவப்புடன் பகவானை கண்ணனை தொழுதவனாய் பூரிப்புடன் அருகே நின்று எம்பெருமான் அழகை கண்ணாரக் கண்டு* விம்மி பூரிப்புடன் மகிழ்ச்சித் திளைப்பில்* நிற்கிறான்.

6.ஓதக்கடலின்
ஒளிமுத்தின் ஆரமும்
சாதிப் பவளமும் சந்தச் சரிவளையும்
மாதக்கவென்று வருணன் விடுதந்தான்
சோதிச் சுடர்மணியாய் தாலேலோ
சுந்தரத்தோளனே தாலேலோ.

இந்த பாசுரத்தில் பெரியாழ்வார் வருணன் தந்த பரிசு பற்றி விளக்குகிறார்.

ஓதக்கடலின்... அதாவது அலைகள் ஓசையிட்டுக் கொண்டு இருக்கும் கடலின் ஆழத்தில் தான் நல்லமுத்து உயர்ரக ஒளி பொருந்திய நல்லமுத்துகள் விளையும்.

அப்படி குளுமையான நல்ல ஒளி பொருந்திய நல்லமுத்துகளால் ஆன ஆரமும்....

அழகிய முத்துமாலை யும்....

சந்திரன் வம்சத்தில் வந்து அவதரித்த கிருஷ்ண பரமாத்மா அவனோ பாற்கடலில் பள்ளி கொண்ட பரந்தாமன்.

கடலோடு ஆன அவனது தொடர்பு விசேஷமானது. பாற்கடல் வாசகனுக்கு ஆழ்கடலில் விளைந்த நல்லமுத்து மாலையை வருணன் அளிப்பது மிகவும் பொருத்தமான ஒன்று.

நீருக்கு- மழைக்கு அதிபதி வருணன் அவனல்லவா சிறந்த முத்து மாலையை பரிசளிக்கத் தக்கவன்?!

சாதிப் பவளமும்....

இதுவும் கடலுக்கடியில் வளரும் பவளப் பாறையிலிருந்து கிடைக்கும் ஒரு இரத்தினம்.

நல்ல உயர்ரக பவளமும் ...

சந்தச் சரிவளையும்

முத்து பவளம் பதித்த தோளில் சரியும் வளையல்களை

“மாதக்கவென்று”....

கிருஷ்ணனுக்கு பொருத்தமான உயர்ந்த சிறந்த பரிசில் என்று எண்ணி வருணன் முத்தும் பவளமுமாலான சிறந்த உயரிய பரிசுகளை தந்துள்ளான்...

சோதிச்சுடர்முடியாய்!!

7.கானார் நறுந்துழாய் கைசெய்த கண்ணியும்
வானார் செழுஞ்சோலை கற்பகத்தின் வாசிகையும்
தேனார்மலர்மேல் திருமங்கை- போத்தந்தாள் கோனே! அழேல்-
அழேல் தாலேலோ! குடந்தைக் கிடந்தானே தாலேலோ.

கண்ணி- நெருக்கமாக அழகாக பூ மாலை கோர்க்கும் விதம் கண்ணி வைத்து கட்டுதல் என்று மாலை கட்டுபவர்கள் கூறுவார்கள்.

கானார் காடு போல் ப்ருந்தையாகிய துளசி செழித்து வளர்ந்து ப்ருந்தாவனம் என்றே சொல்லலாம்

துளசி நறுமணத்துடன் காய் விட்டுக் கொண்டு நன்றாக வளர்ந்து மணம் வீசும்.

வானார்- விண்ணுலகில்

கற்பகத்தரு- கற்பக விருட்சம்

வாசிகை நல்ல மணம்

திருமங்கை பிராட்டி...

பிராட்டி தன் நாதனுக்கு என்று ஸ்பெஷலாக நறுந்துழாயுடன் நல்ல வாசனை மிகுந்த கற்பக மலர்களையும் சேர்த்து துளசி இலைகளை கண்ணியாகத் தொடுத்து தன் திருக்கரங்களால் கற்பக மலர்களையும் நெருக்கமாக பார்க்க ரம்யமாக கட்டி!! இனிய நறு மணத்துடன் மாலை கட்டி தன் அன்பான பரிசிலாக தேவியும் நிறைவாக அளித்துள்ளார்... என் அரசே குடந்தையில் கிடந்தவாறு வீற்றிருக்கும்

குடந்தை பிரானே நீ அழாமல் கண்ணுறங்கு என் செல்லமே கண்ணுறங்கு என்று பெரியாழ்வார் கண்ணனுக்கு தாலாட்டு பாடியருளுகிறார்.

8.கச்சோடுபொற்சுரிகை காம்பு கனவளை
உச்சி மணிச்சுட்டி ஒண்தாள்நிரைப்-பொற்பூ
அச்சுதனுக்கென்று அவனியாள் போத்தந்தாள்
நச்சுமுலையுண்டாய் தாலேலோ நாராயணா அழேல் தாலேலோ.

முந்தைய பாசுரத்தில் பெரிய பிராட்டியார் அளித்த பரிசிலைக் கூறி கண்ணுறங்கு என்று தாலாட்டு பாடியவர்....
இந்த பாசுரத்தில் பூமிப்பிராட்டியின் பரிசு பற்றி எடுத்துரைக்கிறார்!!

அவனியாள்- பூமிப்பிராட்டி.

சுரிகை கத்தி.

பூமிப்பிராட்டி நல்ல சிறப்பாக!! தங்கச்சரிகை வேலைப்பாடுகள் செய்த அருமையான கச்சு அதாவது கால்சராய்/ அல்லது வேட்டி கச்சம் வைத்து கட்டியது போல் இன்று விதவிதமாக குழந்தைகளுக்கு ஆடை அலங்காரம் கடைகளில் கிடைக்கிறது.
அது போல கண்ணபிரானுக்கு.....அதில் சொருக தங்க கத்தியும்....

அன்று அளவிட முடியாத மானமிலாப் பன்றியாக அவதரித்து தன்னை நீருக்கடியிலிருந்து மீட்டு வந்த தம்பிரானுக்கு...!!

பூமிப்பிராட்டி கண்ணபிரானாக கோகுலத்தில் யாதவ பாலகனாக வந்து தோன்றிய யசோதா மாதாவின் அருந்தச் செல்வனுக்கு-

பளபளப்பான ஆடை அணிகலன்கள் அனுப்புகிறாளாம்...
கச்சொடு பொற்சுரிகை காம்பு கனவளை உச்சி மணிச்சுட்டி!!
குழந்தை அலங்கார பூஷணனாக இருக்க வேண்டும் அல்லவா?

குறைவின்றி நெற்றிச்சுட்டி இரத்தின மணிகள் பதிச்ச சுட்டி வளையல் டிசைன் டிசைனா நிறைய அவரவர் மனவிருப்பத்திற்கேற்ப காய் ...பூ டிசைன் இருக்குமல்லவா பூமிப்பிராட்டி காம்பு டிசைனில் நல்ல உறுதியான வளை விளையாடும் குழந்தை உடைத்து நெளித்து விடக்கூடாது அல்லவா?!

நெற்றிச் சுட்டி அதோடு பூ அலங்காரத்தில் ஒண்தாள்நிரைப்பொற்பூ*
பின்னலில் செருக!! என்று....பூமிப்பிராட்டி பூலோக நாயகி அல்லவா நல்ல கவர்ச்சிகரமாகவும் மனதை மகிழ வைக்கும் விதத்தில் அழகான வேலைப்பாடுகள் நிறைந்த பரிசுகள் அனுப்பித் தருகிறாள் தன் நாதனுக்கு.
பிறகென்ன!?
கண்ணபிரானுக்கு வானவர் அனைவரும் பிராட்டியாரும்.....

உகந்த பரிசில் மனமகிழ அளித்து பெருமைப் படுத்தி உள்ளனர். குறையற்ற கோவிந்தனுக்கு குறைவிலா பரிசுகள் தேவிமார்களும் அனுப்பி மகிழ்ச்சியை கொண்டாடி ஆச்சு!!

பூதனை விஷத்தை தடவி வந்து தன்முலைப்பால் ஈந்து அன்றோ கம்சனின் ஆணைப்படி கண்ணபிரானைக் கொலை செய்ய வந்தாள் அவள் எண்ணப்படியே அவளின் முலைப்பால் குடித்து அவள் உயிரையும் அதன்மூலம் சேர்த்து குடித்த- 'என் கண்ணபிரானே' நிம்மதியாக கண்ணுறங்கு. நாராயணா கண்ணுறங்கு.
என்று பெரியாழ்வார் தாலாட்டு பாடியருளுகிறார்.

9.மெய்திமிரும் நான
பொடியோடு மஞ்சளும்
செய்ய தடங்கண்ணுக்கு
அஞ்சனமும் சிந்துரமும்

வெய்ய கலைப்பாகி கொண்டு உவளாய் நின்றாள்
அய்யா அழேல் அழேல் தாலேலோ
அரங்கத்தணையானே தாலேலோ.

கலை என்றால் ஆண் மான்.

வெய்ய- *மிரட்சியுடன் பார்க்கும்-மான்.
பாகி – வாகனம்

மும்மூர்த்திகளில் இருவரும் பிரமன்- ஈசன், இந்திரன், வருணன் குபேரன் என்று அமரர்களும் தேவிமார்கள் ஸ்ரீதேவியும் பூதேவியும் அச்சுதனுக்கு தங்கள் பரிசாக எல்லாம் மனதுக்கு உவப்பாக தந்து விட்டார்கள். குழந்தைக்கு ஒரு பாதுகாப்பு வேண்டாமா?!!

இந்த பாசுரத்தில் மூத்தவளாக தமக்கையாக மகாமாயா அஷ்டமி திதியில் யசோதா மாதாவிற்கு மகளாக பிறந்து கண்ணனுக்காக இடம் மாறி வசுதேவர்-தேவகி தம்பதியர் இருந்த சிறையில் அவர்கள் மகளாக சற்று நேரம் இருந்து கம்சன் தூக்கிப் போட்டு வெட்டும் தருணம் ஆகாயத்தில் துர்கையாக காட்சி அளித்து மறைந்தாளே!!

அந்த மகாமாயா துர்காதேவி ……

சிவன் கையில் மான் இருக்கும் அல்லவா? சிவனின் மறுபாதியான- காளிக்கும் ஆண்மானை!! வாகனமாக* உடைய காளி/ துர்கை.*

…..

நறுமணம் வீசும்…

“ஸ்நான பொடி-” கஸ்தூரி-மஞ்சள், ஜவ்வாது, கற்பூரம் போன்ற விசேஷமான பொருட்களை கொண்டு கிருஷ்ணனுக்கு என்று தயாரித்த ஸ்நானபொடி*

பூசி அன்னை யசோதை குளிப்பாட்டி…

குழந்தை நன்கு நறுமணத்துடன் ஆனந்தமாக வளர வேண்டும் என்று நன்கு பார்த்துப் பார்த்து ஒவ்வொன்றையும் சிறப்பாக செய்து !!

….. நறுமணத்துடன் விளங்கும் குட்டிக் க்ருஷ்ணனுக்கு !!

நறுமணம் வீசும் பொடிகள் பூசி கண்ணனை குளிப்பாட்டிய பிறகு….

அலங்காரம்!!

அலங்காரப்பிரியனுக்கு தனி கவனம் எடுத்து செய்ய வேண்டாமா!!?

கண்ணுக்கு தானே தயாரித்த மை* தீட்டி….

நெற்றியில் சிந்துரமிட்டு திருட்டி(திருஷ்டி) படாமல் குழந்தையை காக்க யசோதா மாதா படும்பாடு இருக்கே!!

அப்பப்பா!!

அதை என்னவென்பது…

குழந்தை பிறந்தது முதல் குழந்தைக்கு வந்த ஆபத்துகள்!! ஒன்றா இரண்டா? அப்பப்பா…

இப்படி ஆபத்தை கூடவே வைத்துக்கொண்டு அவதரித்த கண்ணபிரானுக்கு ஒரு காவல்- காப்பு வேண்டாமா?!

அதற்கு உவகையுடன்-

சந்தோஷமாக காவலாக வந்து முன் நிற்கிறாளாம்

மகாமாயாவான காளி!!

குழந்தை கிருஷ்ணனை காக்கவென்று

மனமகிழ்வுடன் காளி/ துர்கை தான் முன்வந்து மகிழ்ச்சியுடன் காத்து நிற்கிறாளாம்!!…

இப்படி சகோதரனுக்கு காவலாக இருக்க ஒரு சகோதரி உறவும் வேண்டும் அல்லவா?

அரங்கத்தணையானே!!

திருவரங்கத்தில் ஆதிசேஷன் மீது பள்ளி கொண்டிருக்கும் பிரானே அழாதே ஆனந்தமாக எந்த கவலையும் இன்றி கண்ணுறங்கு என்று பெரியாழ்வார் யசோதையின் உளப்பாங்கில் மகனுக்கு அருமையான தாலாட்டு பாடியருளுகிறார்.

10.வஞ்சனையால் வந்த- பேய்ச்சி முலையுண்ட
அஞ்சனவண்ணனை:
ஆய்ச்சி தாலாட்டிய

செஞ்சொல் மறையவர் சேர்* புதுவைப்பட்டன் சொல் எஞ்சாமை வல்லவர்க்கு
இல்லை இடர்தானே.

கம்சனால் ஏவப்பட்டு உள்ளத்தில் வஞ்சனையுடன் தாய்ப்பால் தருபவள் போல் தாய் வேடம் பூண்டு வந்த அரக்கி பூதனையின் பாலுடன் அவளது உயிரையும் குடித்த....
மை போன்ற கருமை நிறம் கொண்ட கிருஷ்ணனை-
க்ருஷ்ணம்(ன்) என்றாலே கருப்பு நிறம் என்று பொருள்.!!

அஞ்சனவண்ணனுக்கு பாசமுடன் ஆய்ச்சி(யசோதை) தாலாட்டு பாடிய தாலாட்டு பாடல்களை பக்தியுடன் விஷ்ணு சித்தன் எனும் திருநாமம் கொண்ட பெரியாழ்வார் தென்புதுவை பட்டன்!!

விருப்பமாக க்ருஷ்ணனுக்கு ஆய்ச்சியாக தன்னைக் கருதிக் கொண்டு ஆய்ச்சியாக மாறி குட்டிக் க்ருஷ்ணனுக்கு பாடிய இந்த தாலாட்டு பாசுரங்களை குறைவின்றி நன்றாகப் பாடும் பக்தர்களுக்கு என்றும் ஒரு குறைவும்/ துன்பம்* இல்லை...

இடர்களுக்கு* இடர் நேரும் பெரியாழ்வார் கண்ணபிரானுக்கு பாடியருளிய இத்தாலாட்டு பாடினால் இடர் இல்லை வராது!! என்று உறுதி படக் கூறி பாசுரத்தை தலைக்கட்டுகிறார்.

நம்மழ்வார் குறிப்பு: நம்மாழ்வார் வைணவ நெறியை பின்பற்றிப் பக்தியில் சிறந்து விளங்கிய பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர். இவர் மாறன் சடகோபன் என்ற பெயரில் தமிழ்நாட்டில் தூத்துக்குடி மாவட்டம் ஆழ்வார் திருநகரில் பிறந்தார். நான்கு வேதங்களையே தீந்தமிழில் பாடியதால் "வேதம் தமிழ் செய்த மாறன்" என்றே புகழப்படுகிறார் .கம்பர் இயற்றிய "சடகோபர் அந்தாதி "என்னும் நூலின் தலைவனும் இச்சடகோபனே ஆவார்.

நம்மாழ்வார்-முன்றாம் திருமொழி திருவல்லிக்கேணி.

இயற்றிய நூல்கள் :

நம்மாழ்வார் இயற்றிய பாசுரநூல்கள் திருவிருத்தம் ,திருவாசிரியம் ,பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி இவை ரிக் ,யசுர் ,அதர்வண

,மற்றும் சாம வேதத்தின் சாரமாக அமைந்திருப்பதாக பெரியோர்கள் சொல்வார்கள். இந்த திருவாய்மொழியில் 1102 பாசுரங்களும், திருவிருத்தம் நூலில் 100பாசுரங்களும், திருவாசிரியம் நூலில் 8 பாசுரங்களும் ,பெரிய திருவந்தாதி நூலில் 87 பாசுரங்களும் என நான்கு பிரபந்தங்களில் 1296 பாசுரங்களை இசைத்துள்ளார்.

சிறப்பு பெயர்கள்:

1. சடகோபன்
2. மாறன்
3. ஞான தேசிகன்
4. தொண்டர் பிரான் போன்றனவாகும்.

3-ஆம் திருமொழி

திருவல்லிக்கேணி

1) வில்பெரு விழவும் கஞ்சனும் மல்லும்,
வேழமும் பாகனும் வீழச்
செற்றவன் தன்னைப் புறம் எரி செய்த, சிவன் உறு துயர் களை தேவை
பற்றலர் வீயக் கோல் கையில் கொண்டு,
பார்த்தன் தன் தேர் முன் நின்றானை
சிற்றவை பணியால் முடி துறந்தானை,
திருவல்லிக்கேணிக் கண்டேனே.

பொருள: வில்வேள்வியும், அதை நிகழ்த்திய கம்சனம் ,அவன் துணை மலர்களும் ,யானையும் ,அதன் பாகனும் வீரசெய்தவனை ,திரிபுரம் எரித்த சிவபெருமானுடைய துன்பத்தை தீர்த்தவனை பகைவர்கள் மடியும் மாறும் அர்ச்சுனனது தேரில் நின்று அம்புகளைத் தன் மார்பில் ஏற்றுக் கொண்டு காத்தவனைச் சிற்றன்னை ஆணையிட துறந்தவனை திருவல்லிக்கேணியில் கண்டேனே.

2) வேதத்தை வேதத்தின் சுவைப் பயனை,
விழுமிய முனிவர் விழுங்கும்
கோது இல் இன் கனியை நந்தனார் களிற்றை,
குவலயத்தோர் தொழுது ஏத்தும்
ஆதியை அமுதை என்னை ஆள் உடை
அப்பனை ஒப்பவர் இல்லா
மாதர்கள் வாழும் மாட மா மயிலைத்
திருவல்லிக்கேணிக் கண்டேனே.

பொருள்: வேதத்தைச் செல்வமாக உடையவனை, வேதங்களால் சொல்லப்படும் குணங்களின் சுவைக்கு தக்க பயனை தருபவனை ,முனிவர்களுக்கு கோதில்லாத இல்லாத இனிய கனி போல இருப்பவனை நந்தகோபருக்கு இனிமையாக இருப்பவனை ஞாலத்தில் உள்ளவர்கள் வாழ்த்தும் காரணனை ,என்னை அடிமை கொள்ளும் அப்பனை ஒப்பில்லாத மாதர்கள் வாழும் மாடங்கள்

அடர்ந்த மயிலாப்பூரைப் படை வீடாக உடைய திருவல்லிக்கேணியில் நான் கண்டேன்.

3) வஞ்சனை செய்யத் தாய் உரு ஆகி,
வந்த பேய் அலறி மண் சேர
நஞ்சு அமர் முலைஊடு உயிர் செக உண்ட,
நாதனை தானவர் கூற்றை
விஞ்சை வானவர் சாரணர் சித்தர்,
வியந்துதி செய்யப் பெண் உரு ஆகி
அம்சுவை அமுதம் அன்று அளித்தானை,
திருவல்லிக்கேணிக் கண்டேனே.

பொருள்: தன்னை வஞ்சனையால் முடிப்பதாக கருதி, தாயின் படிய கொண்டு வந்த பூதனை கதறிக்கொண்டு நிலத்திலே மடிந்து விழுமாறு நஞ்சு படர்ந்த முலை வழியே அவளது உயிரை உண்டவனை, உலகுக்கு உயிரானவனை ,அசுரர்களுக்கு காலமானவனை ,வித்யாதரன் சாரணர் சித்தர் உள்பட தேவர்கள் வியந்து ஏத்தி போற்றிட பெண்ணுருவைக் கொண்டு தேவர்கள் உன்னமாறு சாவா மருந்து அளித்த திருமாலை திருவல்லி கேணியில் கண்டேன்.

4) இந்திரனுக்கு என்று ஆயர்கள் எடுத்த,
எழில் விழவில் பழ நடை செய்
மந்திர விதியில் பூசனை பெறாது,

மழை பொழிந்திடத் தளர்ந்து ஆயர்
எந்தம்மோடு இன ஆநிரை தளராமல்,
எம் பெருமான் அருள் என்ன
அந்தம் இல் வரையால் மழை தடுத்தானை,
திருவல்லிக்கேணிக் கண்டேனே.

பொருள்: ஆண்டுக்கு ஒரு முறை இந்திர விழா நடைபெறமையால் இந்திரன் சினந்து கல் மழையை பெய்வித்தான் இதனால் இடையர் மனம்தளர்ந்து, "பசுக்களுக்கு காவலான எங்களையும் பகுத்தறிவுகளையும் துன்பப்படாமல் கண்ணனே! காப்பாற்றி அருள வேண்டும் "என்று இறைஞ்ச அப்போது அளவிட முடியாத பெரிய கோவர்தன மழையைக் குடையாகக் கவிர்த்து மழையைத் தடுத்த கோவிந்தனைத் திருவல்லிகேணியில் கண்டேன்.

5) இன் துணை பதுமத்து அலர் மகள் தனக்கும்
இன்பன், நல் புவி தனக்கு இறைவன்
தன் துணை ஆயர் பாவை நப்பின்னை
தனக்கு இதறை, மறையோர்க்கு எல்லாம்
வன் துணை பஞ்ச பாண்டவர்க்கு ஆகி,
வாய் உறை தூது சென்று இயங்கும்
என் துணை எந்தை தந்தை தம்மானை,
திருவல்லிக்கேணிக் கண்டேனே.

பொருள்: நெஞ்சுக்கினிய துணையாக இருக்கும் மலர்மகள் பெரிய பிராட்டியாருக்கு இன்பனாய், பொறுமைக்கு சிகரமான நில மக்களுக்கு தலைவனாய், ஆயர் குல அழகிய நட்பின்னைக்குக் காதர் கேள்வனாய், பிறருக்கு வலிய வரும் துணைவனாய், பாண்டவர்களுக்காக அவர்கள் சொல்லிய மொழிகளைத் தூதில் சென்று மொழிந்தவனை, எனக்கு துணையென்றுதான் அறிவித்த பெருமானைத் திருவல்லிக்கேணியில் கண்டேன்.

6) அந்தகன் சிறுவன் அரசர் தம் அரசற்கு
இளையவன் அணி இலழையைச் சென்று
எந்தமக்கு உரிமை செய் எனத் திரியாது
எம் பெருமான்! அருள் என்ன
சந்தம் அல் குழலால் அழகன் நூற்றுவர்தம்,
பெண்டிரும் எய்தி நூல் இழப்ப
இந்திரன் சிறுவன் தேர் முன் நின்றானை,
திருவல்லிக்கேணி கண்டேனே.

பொருள்: பிறவி குருடனின் மகன் அரசன் துரியோதனனின் தம்பி அணிகலன் அணிந்த திரௌபதியிடம் சென்று "சூதிலே உன்னையும் தோற்றார்கள்; ஆதலால் நீ எமக்கு இழிதொழில் செய்வாய் என்று கூறினான். இவள் 'கண்ணா காப்பாற்று' என்று கதறினாள். இவள் அடைந்த துயரைத் தீர்க்க பெருமால் துரியோதனாதியர் மனைவிமார் மங்கல நாணை இறக்குமாறு அர்ஜுனன் தேர் முன்னே இன்று சாரதியானான்

இவனை திருவல்லிக்கேணியில் கண்டேன்.

7) பரதனும் தம்பி சத்துருக்கனனும்,
இலக்குமனோடு மைதிலியும்
இரவும் நான் பகலும் துதி செய்ய நின்ற,
இராவணாந்தகனை எம்மானை
குரவமே கமழும் குளிர் பொழிலூடு,
குயிலொடு மயில்கள் நின்று ஆல
இரவியின் கதிர்கள் நுழைதல் செய்வதறியாத்
திருவல்லிக்கேணிக் கண்டேனே.

பொருள்: பரதனும் சத்துருக்கனனும் இளையபெருமாளும், மதிலை பிராட்டியும் ஒருங்கே கண்டு துதி செய்ய நின்றவனாய், இராவணனுக்குக் காலனான திருமகனை குரவ மலர்கள் குளிர்ந்து மணக்கும் கண்ணுக்கு இனிய சோலைகளிலே குயில்களும் மயில்களும் களித்து ஆட சோலைச் செறிவாலே செங்கதிர்கள் நுழைந்தறியாத திருவல்லிக்கேணியில் கண்டேன்.

8) பள்ளியில் ஓதி வந்த தன் சிறுவன்,
வாயில் ஓர் ஆயிரம் நாமம்
ஒல்லிய ஆகி போத ஆங்கு அதனுக்கு,
ஒன்றும் ஓர் பொறுப்பு இலன் ஆகி
பிள்ளையைச் சீறி வெகுண்டு தூண் புடைப்ப,
பிரறை எயிற்று அனல் விழி பேழ் வாய்

தெள்ளிய சிங்கம் ஆகிய தேவை,
திருவல்லிக்கேணிக் கண்டேனே.

பொருள்: பள்ளியிலே கலைகள் பயின்று, தன் முன் நிற்கும் இளம்பிள்ளை பிரகலாதன் வாயிலே இறைவனின் ஆயிரம் பெயர்களைக் கூற, அது தன் மனதுக்கு இன்னாததாலே இரணியன் அந்த சொல்லை ஏற்க பொறுமையில்லாது மகனிடம் சினந்து, 'எங்கும் உள்ளான் இத்தூணில் உள்ளானோ?' என்று அட்டப்பிறைப் பற்களும், தழல் சிவந்த கண்களும், பெரிய வாயும் வாய்ந்து நர மடங்கலாய் தூணில் இருந்து வெளிவந்த பெருமானைத் திருவல்லிக்கேணியில் கண்டேன்.

9) மீன் அமர் பொய்கை நாள்மலர் கொய்வான்,
வேட்கையினோடு சென்று இழிந்த
கான் அமர் வேழம் கைஎடுத்து அளர
கரா அதன் காலினைக் கதுவ
ஆனையின் துயரம் தீரப் புள் ஊர்ந்து,
சென்று நின்று அழிதொட்டானை
தேன் அமர் சோலை மாட மா மயிலைத்
திருவல்லிக்கேணிக் கண்டேனே.

பொருள்: மீன்கள் நிறைந்த பொய்கையில் தாமரை மலர்களைப் பெருமாள் திருவடிகளில் வைக்கக் கொய்ய இறங்கையில் காட்டிலே எங்கும் திரியவல்ல கசேந்திரனை, அப்பொய்கையில் வாழ்ந்த

முதலை அதன் காலைப் பற்றியதால் துதிக்கையைத் தலைக்கு மேலே தூக்கிப் பிளிரியது. ஆனையின் இத்துயரம் தீர பெருமான் கருடன் மேலேறி விரைந்து திருவாழியை விடுத்து முதலையைக் கொன்றான். இப்பெருமானைத் தேன் மாறாத சோலைகளால் சூழப்பட்ட திருவல்லிக்கேணியில் கண்டேன்.

10) மன்னு தண் பொழிலும் வாவியும் மதிளும்,
மாட மாளிகையும் மண்டபமும்
தென்னன் தொண்டையர் கோன் செய்த நல் மயிலைத்,
திருவல்லிக்கேணி நின்றானை
கன்னி நல் மாட மங்கையர் தலைவன்,
காமரு சீர்க் கலிகன்றி
சொன்ன சொல் மாலை பத்து உடன் வல்லார்,
சுகம் இனிது ஆழ்வர் வான்உலகே.

பொருள்: குளிர்ந்துள்ள பொழில்களும், நீர் நிலைகளும், மதிள்களும், மாடமாளிகைகளும், மண்டபங்களும் நலமெல்லாம் வாழ்ந்த மயிலாப்பூரைப் படை வீடாக உடையதான திருவல்லிக்கேணியில் நின்றானைத் திருமங்கை ஆழ்வார் கலிகன்றி அருளிச்செய்த பத்து பாட்டுகளையும் ஓதவல்லார், வானின்பம் பெறுவர்.

**குலசேகர ஆழ்வார் குறிப்பு:**

குலசேகர ஆழ்வாரின் காலம் கி.பி. 8 ஆம் நூற்றாண்டு என அறியப்படுகிறது. அவர் பன்னிரு ஆழ்வார்களில் ஒருவராவர், மேலும் சேர நாடக ஆசிரியர்-ராஜா குலசேகர வர்மாவாக அறியப்படுகிறார்.

காலம்:

கி.பி. 8 ஆம் நூற்றாண்டு

ஆழ்வார்:

பன்னிரு ஆழ்வார்களில் ஒருவர்

தொடர்பு:

சேர நாடக ஆசிரியர்-ராஜா குலசேகர வர்மாவாக அறியப்படுகிறார்

ஆட்சி காலம்:

கி.பி. 844/45 முதல் சுமார் 870/71 வரை ஆட்சி செய்தார்.

குலசேகர ஆழ்வார்

6ஆம் திருமொழி.

1.ஏர்மலர்ப் பூங்குழ லாயர்மாதர் எனைப்பல ருள்ளவிவ் வூரில்உன்றன்

மார்வு தழுவுதற் காசையின்மை அறிந்தறிந் தேயுன்றன் பொய்யைக்கேட்டு

கூர்மழை போல்பனிக் கூதலெய்திக் கூசி நடுங்கி யமுனையாற்றில்

**விளக்கம்:**

வார்மணற் குன்றில் புலரநின்றேன் வாசுதே வாஉன் வரவுபார்த்தே.

கண்ணபிரான் ஒரு பெண் பிள்ளையை நோக்கி 'நீ யமுனையாற்றின் மணற்குன்றிலே போய் நில்லு, நான் அங்கே வருகிறேன்' என்று சொல்லி விட, அப்படியே அவள் அங்கே போய் விடியுமளவும் நின்று அவன் வரக்காணாமல் வருத்தத்தொடு மீண்டு வந்து, மற்றொரு நாள் அவனைக் கண்ட போது ப்ரணய ரோஷந் தோற்றச் சொல்லுகிற பாசுரமாயிருக்கிறது இப்பாட்டு. அநியாயமாய் உன் பொய்யைக் கேட்டு மோசம் போனே னென்கிறாள் ( வாசு தேவா !) கனவிலும் பொய் சொல்லியறியாத வஸுதேவர் வயிற்றிற் பிறந்த நீயும் தந்தையை ஒத்திருப்பாயென்று நம்பிக் கேட்டேன் காண்! என்ற குறிப்பு – புலர்தல் – பொழுது விடிதல்.

2.கெண்டையொண் கண்மட வாளொருத்தி கீழை யகத்துத் தயிர்கடையக்

கண்டுஒல்லை நானும் கடைவனென்று கள்ள விழிவிழித் துப்புக்கு

வண்டமர் பூங்குழல் தாழ்ந்துலாவ வாண்முகம் வேர்ப்பச்செவ் வாய்த்துடிப்ப

தண்டயிர் நீகடைந் திட்டவண்ணம் தாமோத ராமெய் யறிவன்நானே.

விளக்கம் :

வேறொரு ஆய்ச்சியின் வார்த்தை இது. என் அகத்திற்குக் கீழண்டை அகத்திலிருப்பாளொரு பெண் பிள்ளையானவள் தனியே யிருந்து தயிர் கடையா நிற்கையில் அது கண்ட நீ அவளருகில் ஓடிச் சென்று புகுந்து "அம்மா! நீ தனியாகத் தயிர் கடைந்தால் ஒரு காலும் வெண்ணெய் புறப்படமாட்டாது நானும் ஒருதலைப் பற்றிக் கடைந்தால் தான் விரைவில் வெண்ணெய் காணும் " என்று வாயாற் சொல்லி, உள்ளே வேற்று நினைவு இருக்கும் படி தோன்றத் திருட்டு விழி விழித்து, மயிர் முடி அவிழ்ந்து அலையும் படியாகவும், தாமரையிலே முத்துப் படிந்தாற் போலே ஒளி பொருந்திய முகம் வேர்க்கும் படியாகவும், அதரம் துடிக்கும் படியாகவும் அவளோடே கூடி நீ தயிர்கடைந்த வரலாறு எனக்குத் தெரியுமப்பா! என்கிறாள். 'இன்னமும் அங்கேயே தயிர் கடையப்போ; இங்கே உனக்கென்ன பணி!' என்ற ஊடல் உள்ளுறை.

3.கருமலர்க் கூந்த லொருத்திதன்னைக் கடைக்கணித்து ஆங்கே யொருத்திதன்பால்

மருவி மனம்வைத்து மற்றொருத்திக் குரைத்தொரு பேதைக்குப் பொய்குறித்து

புரிகுழல் மங்கை யொருத்திதன்னைப் புணர்தி யவளுக்கும் மெய்யனல்லை

மருதிறுத் தாய்உன் வளர்த்தியூடே வளர்கின்ற தாலுன்றன் மாயைதானே.

**விளக்கம்:**

இங்கே “மருதிறுத்தாய்! ” என விளித்ததனால், நீ பருவம் நிரம்புவதற்கு முன்னமே தீண்டினாரைக் கொன்றவனாதலால் உன்னைத் தீண்ட நான் அஞ்சா நின்றேன் காண் என்று குறிப்பிட்டவாறு மென்ப.

4.தாய்முலைப் பாலி லமுதிருக்கத் தவழ்ந்து தளர்நடை யிட்டுச்சென்று

பேய்முலை வாய்வைத்து நஞ்சையுண்டு பித்தனென் றேபிற ரேசநின்றாய்

ஆய்மிகு காதலோடு யானிருப்ப யான்விட வந்தவென் தூதியோடே

நீமிகு போகத்தை நன்குகந்தாய் அதுவுமுன் கோரம்புக் கேற்குமன்றே.

விளக்கம்:

இங்கே “மருதிறுத்தாய்! ” என விளித்ததனால், நீ பருவம் நிரம்புவதற்கு முன்னமே தீண்டினாரைக் கொன்றவனாதலால் உன்னைத் தீண்ட நான் அஞ்சா நின்றேன் காண் என்று குறிப்பிட்டவாறு மென்ப.

5.மின்னொத்த நுண்ணிடை யாளைக்கொண்டு வீங்கிருள் வாயென்றன் வீதியூடே

பொன்னொத்த வாடைகுக் கூடலிட்டுப் போகின்ற போதுநான் கண்டுநின்றேன்

கண்ணுற் றவளைநீ கண்ணாலிட்டுக் கைவிளிக் கின்றதும் கண்டேநின்றேன்

என்னுக் கவளைவிட் டிங்குவந்தாய் இன்னமங் கேநட நம்பிநீயே.

விளக்கம்:

வேறொருத்தியின் பாசுரம் இது. நள்ளிருளில் ஒருவர்க்குந் தெரியாமல் போக வேணுமென்று போகிறவன் இருளன்னமாமேனியைத் திறந்து கொண்டே போகலாம்; அல்லது கறுத்ததோர் ஆடையைப் போர்த்துக் கொண்டு போகலாம். நீயோ இருளை அகற்றிப் பளபளவென்று ப்ராகாசிக்கும் படியான பீதாம்பரத்தை முட்டாக்கிட்டுக் கொண்டு போனாய்; போவதுதானும் வேறு வழியாயோ! நான் கண்டு வயிறெரிய வேணுமென்றே என் தெருவழியே போனாய், என்ற கருத்துக்களை விரித்துக் கொள்க ( குக்கூடல் – முட்டாக்கு ).

6.மற்பொரு தோளுடை வாசுதேவா வல்வினை யேன்துயில் கொண்டவாறே

இற்றை யிரவிடை யேமத்தென்னை இன்னணை மேலிட்ட கன்றுநீபோய்

அற்றை யிரவுமோர் பிற்றைநாளும் அரிவைய ரோடும் அணைந்துவந்தாய்

எற்றுக்கு நீயென் மருங்கில்வந்தாய் எம்பெரு மான்நீ யெழுந்தருளே.

விளக்கம்:

வேறொரு பெண்மணியின் பேச்சு இது. மல்லர்களோடு யுத்தஞ் செய்யக் கற்றாயேயன்றி என்னோடு ச்ருங்கார ரஸாநுபவம் பண்ணக் கற்றிலைகாண்! என்ற உபாலம்பம் தோன்ற " மற்றொரு தோளுடை வாசுதேவா!" என விளிக்கின்றனள். வல்வினையேன் – நீ என்னை ஒருத்தியையே விரும்பி மற்றையோரைக் கண்ணெடுத்துப் பாராமலிருப்பதற் குறுப்பான பாக்கியமற்ற நான், என்பது கருத்து. இரண்டாமடியில், " இற்றையிரவிடை " என்றே பாடம் நிகழினும் " அற்றை யிரவிடை " என்ற பாடமே வியாக்கியானத்திற்கும் பொருட் சேர்த்திக்கும் தகும் என்பர் பெரியோர்.

7.பையரவிண்ணைப்பள்ளியினாய் பண்டையோமல்லோம்நாம் * நீயுகக்கும்

மையரியொண்கண்ணினாருமல்லோம் வைகியெம்சேரிவரவொழிந்*

செய்யவுடையுந்திருமுகமும் செங்கனிவாயுங்குழலுங்கண்டு*

பொய்யொருநாள்பட்டதேயமையும் புள்ளாவம் பேசாதேபோகுநம்பீ.

விளக்கம்:வைகி என்றதன் கருத்து யாதெனில், ‘உங்களிருப்பிடத்திற்கு மற்றும் எத்தனையோ பேர் வருகிறாப்போலே நானுமொருவன் வந்தாலென்ன? என்னையேன் போகச் சொல்லுகிறாய்? என்று கண்ணபிரான் கேட்க: எல்லாரும் வரும் போதில் உன்னை நான் வரவேண்டாவென்று சொல்லவில்லை; பிறர்க்கு அதிசங்கை உண்டாம்படி அகாலத்திலே வருவதைத் தான் மறுக்கிறேன்” என்கிறாள் என்க. பிறகு கண்ணபிரான் ” நங்காய்! இதற்கு முன் சொல்லாத வார்த்தைகளை இன்று புதிதாகச் சொல்லுகிறாயே! என்னை வேற்றுமனிசனாக நினைத்து விட்டாயே!” என்ன, உன் கள்ளச் செயல்களையும் க்ருத்ரிமபாஷணங்களையும் முன்பு நம்பிப் பட்டது போதும்; இனி வேண்டா என்கிறாள். புள்ளுவம் – வஞ்சகம்.

8.என்னை வருக வெனக்குறித்திட் டினமலர் முல்லையின் பந்தர்நீழல்

மன்னி யவளைப் புணரப்புக்கு மற்றென்னைக் கண்டுழ றாநெகிழ்ந்தாய்

பொன்னிற வாடையைக் கையில்தாங்கிப் பொய்யச்சங் காட்டிநீ போதியேலும்

இன்னமென் கையகத் தீங்கொருநாள் வருதியே லெஞ்சினம் தீர்வன்நானே.

விளக்கம்:

என்சினம் தீர்வன்நானே] என்கிறவிடத்தைக் கோயிலில் திருவத்யயநோத்ஸவதத்தில் ”உய்ந்த பிள்ளை” என்பாரொரு அரையர் அபிநயிக்கும்போது, கையாலே அடிப்பதும் காலாலே துவைப்பதுமாய் அபிநயித்தார். அதாவது, – மறுபடியும் நீ என் கையில் அகப்படும்போது உன்னை நான் கையாலடித்தும் காலால் துகைத்தும் என் கோபத்தைத் தணித்துக் கொள்வேன் என்பதாகக் கருத்தை விரித்தார். அப்போது கோஷ்டியில் எழுந்தருளியிருந்த எம்பார் இங்ஙனே அரையர்காட்டிய அபிநயத்தைக் கடாக்ஷித்து அரையர்க்கு ராஸிக்யம் போராதென்று திருவுள்ளம் பற்றி, ” கெடுவாய்! அப்படி அவள் செய்தாளாகில் என்றிருக்கிற கண்ணனுக்கு அது வருத்தமோ! வேப்பிலையுருண்டையோ? இது அவனுக்கு மாகுமன்றோ ஆகையால் அதுவன்று கருத்து; முகங்கொடுக்காமல் முகத்தை மாறவைத்து என் கோபத்தைத் தணித்துக் கொள்வேன் என்னுங் கருத்துத் தோன்ற, கையிட்டு முகத்தை மறைத்துத் திரியவைத்தருளிக் காட்ட வேணுமென்று தாம் அவ்வாறாக அபிநயித்துக் காட்டினார் என்று ப்ரஸித்தம்.

9.மங்கல நல்வன மாலைமார்வில் இலங்க மயில்தழைப் பீலிசூடி

பொங்கிள வாடை யரையில்சாத்திப் பூங்கொத்துக் காதிற் புணரப்பெய்து

கொங்கு நறுங்குழ லார்களோடு குழைந்து குழலினி தூதிவந்தாய்

எங்களுக் கேயொரு நாள்வந்தூத உன்குழ லின்னிசை போதராதே.

விளக்கம்:

அதாவது, – மறுபடியும் நீ என் கையில் அகப்படும்போது உன்னை நான் கையாலடித்தும் காலால் துகைத்தும் என் கோபத்தைத் தணித்துக் கொள்வேன் என்பதாகக் கருத்தை விரித்தார். அப்போது கோஷ்டியில் எழுந்தருளியிருந்த எம்பார் இங்ஙனே அரையர்காட்டிய அபிநயத்தைக் கடாக்ஷித்து அரையர்க்கு ராஸிக்யம் போராதென்று திருவுள்ளம் பற்றி, ” கெடுவாய்! அப்படி அவள் செய்தாளாகில் என்றிருக்கிற கண்ணனுக்கு அது வருத்தமோ! வேப்பிலையுருண்டையோ? இது அவனுக்கு “*******” மாகுமன்றோ ஆகையால் அதுவன்று கருத்து; முகங்கொடுக்காமல் முகத்தை மாறவைத்து என் கோபத்தைத் தணித்துக் கொள்வேன் என்னுங் கருத்துத் தோன்ற, கையிட்டு முகத்தை மறைத்துத் திரியவைத்தருளிக் காட்ட வேணுமென்று தாம் அவ்வாறாக அபிநயித்துக் காட்டினார் .

10.அல்லி மலர்த்திரு மங்கைகேள்வன் றன்னை நயந்திள வாய்ச்சிமார்கள்

எல்லிப் பொழுதினி லேமத்தூடி எள்கி யுரைத்த வுரையதனை

கொல்லி நகர்க்கிறை கூடற்கோமான் குலசே கரனின் னிசையில்மேவி

சொல்லிய இன்தமிழ் மாலைபத்தும் சொல்லவல் லார்க்கில்லை துன்பந்தானே.

விளக்கம்:

அநியாயமாய் உன் பொய்யைக் கேட்டு மோசம் போனே னென்கிறான் ( வாசு தேவா !) கனவிலும் பொய் சொல்லியறியாத வஸுதேவர் வயிற்றிற் பிறந்த நீயும் தந்தையை ஒத்திருப்பாயென்று நம்பிக் கேட்டேன் காண்! என்ற குறிப்பு – புலர்தல் – பொழுது விடிதல்.

ஆண்டாள் குறிப்பு:

வைணவம் போற்றும் 12 ஆழ்வார்களில் இவர் ஒருவரே பெண்ணாவார். ஆண்டாள், திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்னும் இரண்டு பாடற் தொகுதிகளை இயற்றியுள்ளார். வைணவ சமய நூல்கள் கூறும் இவரது வரலாறு இறைவன் மீது இவர்

கொண்டிருந்த காதலை நமக்கு எடுத்துரைக்கிறது. மேலும், ஆண்டாள் பூமிப் பிராட்டியின் அவதாரமாகக் கருதப்படுகிறார்.

பிறப்பு:

பொ.ஊ. 7 அல்லது 8-வது நூற்றாண்டு

ஸ்ரீவில்லிபுத்தூர்

இறப்பு:

ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி

இயற்பெயர்:

கோதை

சமயம்:

இந்து மதம்

தத்துவம்:

ஸ்ரீ வைணவ.

வட இந்தியாவில் ராதாவின் பக்தி பிரபலமாகப் போற்றப்படுகிறது. பெண் பக்தியாளர்களில் மீராபாய் கண்ணனிடம் கொண்ட அர்ப்பணிப்புடன் கூடிய பக்தியைப் போலத் தமிழகத்தில் ஆண்டாளின் பக்தி போற்றப்படுகிறது. இவரது முதல் படைப்பான திருப்பாவை 30 பாடல்களைக் கொண்டுள்ளது. இத்தொகுப்பு, ஆண்டாள் தன்னை ஆயர்பாடியில் வாழும் கோபிகையாக நினைத்துக் கொண்டு, கண்ணனின் திருவடியை அடைதலையே தன் வாழ்வின் இலட்சியமாக எண்ணிப் பாடியுள்ளதைக் குறிப்பதாக உள்ளது.

ஆண்டாள் அருளி செய்த நாச்சியார் திருமொழி.

1.தை ஒரு திங்களும் தர விளக்கி,

தண் மண்டலம் இட்டு மாசி முன்னாள்

ஐய நுண் மணல் கொண்டு தெரு அணிந்து,

அழகினுக்கு அலங்கரித்து அனங்க தேவா!

உய்யவும் ஆம்கொலோ?என்று சொல்லி,

உன்னையும் உம்பியையும் தொழுதேன்

வெய்யது ஓர் தழல்உமிழ் சக்கரக் கை,

வேங்கடவற்கு என்னை விதிக்கிற்றியே.

விளக்கம்:

காமவேளே! தை மாத முழுவதும் நீ வரும் இடத்தை அழகாக்கிக் குளிர்ந்து பல்வகை எழிற் கோலத்தையிட்டுக், கும்பமாத வளர்பிறையில் சின்னஞ் சிறிய மணல்களினால் நீ வரும் தெருவைப் பென்னம் பெரு அலங்காரம் செய்து, வாழ முடியுமோ எனக் கருதி காமன் ஆகிய உன்னையும் உன் தம்பியான சாமானையும் தொழுதேன் கொடியாதால் ஆழியைத் திருகையில் ஏந்திய திருவேங்கடவனுக்கு என்னை மறுவவிதிக்க வேண்டும்.

2. வெள்ளை நுண் மணல்கொண்டு திரு அணிந்து,

வெல்வரைப்பதன் முன்னம் துறை படிந்து முள்ளும் இல்லா சொல்லி எரி மடித்து ,முயன்று உன்னை நோற்கின்றேன் காமதேவா, அதில் பூங்கனை தொடுத்துக்கொண்டு,

கடல்வண்ணன் என்பது ஓர் பேர் எழுதி புள்ளியினை வாய்ப்பு பிழந்தான் என்பது ஓர், இலக்கினீற் புக என்னை எய்கின்றீரே..

விளக்கம்:

காமவேளே! வெளுத்த மாத்துளைக் கொண்டு நீ வரும் வழியை அணி செய்து கிழக்கு வெளுப்பதற்கு முன் நீர் துறையிலே மூழ்கி எறும்பும் முள்ளும் இல்லாத புள்ளிகளை தின்னுட்டு உன்னைப்பற்றிய பயன் பெற நோன்பு நோர்கிறேன் தேன் பெருகும் மலர் அம்புகளே மில்லில் தொடுத்துக்கொண்டு கடல் நிறத்தை உடையவன் என்கிற திருப்பெயரை ஓர் அம்பிலே எழுதிக்கொண்டு பகாசுரன் வாயை கிழித்து ஒழித்தவன் இலக்கினியில் நான் போகுமாறு நீ செய்ய வேண்டும்.

3.மத்த நண் நறுமலர் முருக்க மலர் கொண்டு ,முப்போதும் உன் அடி வணங்கித் தத்துவம் இலி என்று நெஞ்சு எரிந்து ,வாசகத்து அழித்து உன்னை வைதிடாமே.

விளக்கம்:

காமனே! மனம் மிக்க ஊமத்த மலர்களையும் முருக்க மலர்களையும் கொண்டு, காலை பகல், மாலை ஆகிய மூன்று வேளையும் நான் உன் அடிகளிலே பணிந்தும் பயனை பெறாது இவன் பொய்த் தெய்வமென்று மனம் கொதித்து உன் சிறப்பை அளித்து உன்னை வைத்து விடாத படி, கொத்தாக அலரும் மலர்க்கணைத் தொடுத்துக்கொண்டு கோவிந்தன் பெயரை நெஞ்சில்

வரித்து, வியக்கத்தக்க திருவேங்கடத்தான் என்னும் விளக்கினில் நான் சேரும்படி நீ செய்ய வேண்டும்.

4. சுவரில் புராண! நின் பெயர் எழுதிச் சுறவ நற் கொடிகளும் துரங்களும் கவரிப் பிணாக்களும் வில்லும், காட்டி தந்தேன் கண்டாய் காம தேவா!

விளக்கம்:

காமதேவா! கண்ணனை நினைத்தால் நின் பேர் மறக்கு என்று சுவரில் உன்னுடைய பெயர் வரைந்தேன். சுறவமீன் கொடிகளையும் குதிரைகளையும், சாமரம் வீசும் பெண்களையும் கரும்பு வில்லையும் உனக்கு உரியதாகக் காட்டிக் கொடுத்தேன்.

5. வானிடை வாழும் அவ் வானர்க்கு, மறையவர் வேள்வியில் வகுத்த ஆவி கனியிடைத் திரிவது ஓர் நரி புகுந்து ,கடப்பதும் மோப்பதும் செய்வது ஒப்பா.

விளக்கம்:

தேவர்களுக்காக கொடுக்கும் புனித வேள்வி பொருளை காட்டிலே திரிகின்ற நரி புகுந்து அதனை முகர்வதையும், சுவைப்பதையும் போல், திரிகரங்களில் வாழியையும் சங்கையையும் தரித்திருக்கிறாய் எம்பெருமானுக்கு என்று கிளர்ந்த என் பருத்த முலைகள், நுகர்வதற்காக என்றொரு பேச்சு ஏழுமாயின் நான் உயிர் வாழ்ந்திருக்க மாட்டேன்.

6. உருவு உடையார் இளைஞர்கள் நல்லார், ஒத்து வல்லார்களைக் கொண்டு வைகல் தெருவிடை எதிர் கொண்டு, பங்குனி நாள் திருந்தவே நோற்கின்றேன் காம தேவா!

விளக்கம்:

மன்மதனே! அழகிய வடிவுடையவர்களாய், யுவாக்களாய், நன்னடத்தை உள்ளவர்களாய் இருக்கும் காம சாஸ்த்ரத்திலே நிபுணர்களாய் இருப்பவர்களை முன்னிட்டுக்கொண்டு, தினமும் நீ வரும் வீதிகளில் எதிரே சென்று, பங்குனி மாதத்தில் உன்னுடைய உத்ஸவ ஸமயத்தில் உன்னைத் தெளிவுடன் வணங்குகிறேன். நீர் நிறைந்த கறுத்த மேகம் போன்ற நிறத்தையும் காயாம்பூ போன்ற நிறத்தையும் கருவிளைப்பூ போன்ற ஒளியையும், தாமரை மலர் போன்ற திருமுகத்தில் உள்ள திருக்கண்களாலே என் விஷயத்தில் அவன் கடாக்ஷம் பண்ணும்படி நீ எனக்கு அருள் செய்ய வேண்டும்.

7.காயுடை நெல்லொடு கரும்பமைத்துக் கட்டி அரிசி அவல் அமைத்து

வாயுடை மறையவர் மந்திரத்தால் மன்மதனே! உன்னை வணங்குகின்றேன்

தேச முன்னளந்தவன் திரிவிக்கிரமன் திருக்கைகளால் என்னைத் தீண்டும் வண்ணம்

சாயுடை வயிறும் என் தடமுலையும் தரணியில் தலைப்புகழ் தரக்கிற்றியே.

விளக்கம்:

மன்மதனே! பசுங்காய் நெல் மற்றும் கரும்பைப் படைத்து அதற்குமேலே கருப்பங்கட்டி, அரிசி, அவல் ஆகியவற்றைச் சமைத்து, நல்ல ஸ்வரத்தை உடையவர்களாய் காம சாஸ்த்ரத்தில் நிபுணர்களானவர்களுடைய மந்த்ரத்தாலே நீ என் பிள்ளையாக இருந்தாலும் உன்னை வணங்குகின்றேன். மஹாபலியாலே இந்த லோகங்கள் அபஹரிக்கப்பட்ட காலத்திலே எல்லா லோகங்களையும் திருவடியால் அளந்துகொண்ட த்ரிவிக்ரமன் எம்பெருமான், அவனுடைய திருக்கைகளாலே என்னைத் தீண்டும்படிப் பண்ணி, என்னுடைய ஒளி படைத்த வயிறும், ம்ருதுவான பருத்த முலைகளும் இவ்வுலகிலே நிலைநின்ற புகழைப் பெறும்படி செய்ய வேண்டும்.

எட்டாம் பாசுரம். இதில் தன்னுடைய ஸ்வரூபத்துக்குச் சேர்ந்த செயலான எம்பெருமானுடைய திருவடிகளுக்குத் தொண்டு செய்வதை அருளுமாறு கேட்கிறாள்.

8.மாசுடை உடம்பொடு தலை உலறி வாய்ப்புரம் வெளுத்தொரு போதுமுண்டு
தேசுடைத் திறலுடைக் காம தேவா! நோற்கின்ற நோன்பினைக் குறிக்கொள் கண்டாய்
பேசுவதொன்று உண்டு இங்கு எம்பெருமான்! பெண்மையைத் தலையுடைத்து ஆக்கும் வண்ணம்

கேசவ நம்பியைக் கால் பிடிப்பாள் என்னும் இப்பேறு எனக்கருள் கண்டாய்.

விளக்கம்:

ஒளியையும் சக்தியையும் உடையவனாய் எனக்கு ஸ்வாமியாய் இருக்கும் மன்மதனே! அழுக்குப்படிந்த உடம்போடும் விரித்த கூந்தலோடும், வெளுத்த உதடுகளோடும், ஒரே வேளை உண்டும் நான் செய்யும் இந்த நோன்பை எப்போதும் நினைவில் வைத்துக்கொள். இப்போது, நான் சொல்லவேண்டுவது ஒன்றுண்டு. என் இருப்பு உயர்ந்த நிலையை அடையும்படி கேசி என்ற அஸுரனைக் கொன்றவனாய் அதனாலே கல்யாண குண பூர்த்தி உள்ளவனுக்கு திருவடி சேவை செய்யும் இந்த பேற்றை எனக்கு நீதான் பெற்றுத் தர வேண்டும்.

ஒன்பதாம் பாசுரம். இதில் தனக்கு அருளாவிட்டால் அவனுக்கு வரும் அநர்த்தத்தைச் சொல்லுகிறாள்.

9.தொழுது முப்போதும் உன்னடி வணங்கித் தூமலர் தூய்த் தொழுது ஏத்துகின்றேன்
பழுதின்றிப் பார்க்கடல் வண்ணனுக்கே பணி செய்து வாழப் பெறாவிடில் நான்
அழுதழுது அலமந்து அம்மா வழங்க ஆற்றவும் அது உனக்கு உறைக்கும் கண்டாய்

உழுவதோர் எருத்தினை நுகங்கொடு பாய்ந்து ஊட்டமின்றித் துரந்தால் ஒக்குமே

விளக்கம்:

மூன்று காலங்களிலும் உன்னைத் தொழுது தலையாலே வணங்கி உன்னுடைய அடிகளில் தூய மலர்களைச் சமர்ப்பித்துச் சேவித்து ஸ்தோத்ரம் செய்கின்றேன். உலகைச் சூழ்ந்திருக்கும் கடல் போன்ற வடிவை உடையவனுக்குப் பழுதில்லாமல் தொண்டு செய்து நான் வாழ்ச்சியைப் பெறவில்லை என்றால், பலமுறை அழுது, தடுமாறி, அம்மா என்று கூப்பிட்டுக்கொண்டு திரிய, அந்தப் பலன் உனக்கே நன்றாகக் கிடைக்கும். ஏர் உழும் ஒரு எருதை நுகத்தடியாலே தள்ளி தீனி போடாமல் விரட்டுவதைப் போல அச்செயல் இருக்கும்.

பத்தாம் பாசுரம். இதில் இப்பத்து பாசுரங்களைக் கற்றதற்குப் பலன் சொல்லி முடிக்கிறாள்.

10.கருப்பு வில் மலர்க் கணைக் காம வேளைக் கழலிணை பணிந்து அங்கோர் கரி அலற
மருப்பினை ஒசித்துப் புள் வாய் பிளந்த மணிவண்ணற்கு என்னை வகுத்திடென்று
பொருப்பன்ன மாடம் பொலிந்து தோன்றும் புதுவையர் கோன் விட்டுசித்தன் கோதை

விருப்புடை இன்தமிழ் மாலை வல்லார் விண்ணவர் கோன் அடி நண்ணுவரே.

விளக்கம்:

கரும்பு வில்லையும் பூக்கணைகளையும் உடைய மன்மதனின் காலடிகளை வணங்கி, யானை பிழரே அழறும்படி கொம்புகளை முறித்து பாகாசுரன் வாயை கிழித்து போட்டு நீளமணி வடிவழக நாடு என்னை சேர்ப்பீர் என்று, மழை வைத்தார் போல் மாடங்கள் விளங்கும் வில்லு புத்தூர் கோன் பெரியாழ்வரின் திருமகள் கோதையின் தமிழ் மழையாகிய இப்பாசுரங்களை ஓத வல்லவர்கள் வைகுண்ட நாதனின் திருவடி சேர்வார்.

2ம் திருமொழி நாமமாயிரம்

இடைப்பெண்கள் எங்கள் சிற்றில் சிதையேல் என வேண்டுதல்

கலி விருத்தம்

நாமமாயிர மேத்தநின்ற நாராயணா! நரனே!* உன்னை

மாமிதன்மக னாகப்பெற்றால் எமக்குவாதை தவிருமே*

காமன்போதரு காலமென்று பங்குனிநாள்கடை பாரித்தோம்*

தீமைசெய்யும் சிரீதரா!எங்கள் சிற்றில்வந்து சிதையேலே. 1

இன்று முற்றும் முதுகு நோவ இருந்திழைத்த இச்சிற்றிலை*

நன்றும் கண்ணுற நோக்கி நாங்கொளும் ஆர்வந்தன்னைத் தணிகிடாய்*

அன்றுபாலக னாகி யாலிலை மேல்துயின்றவெம் மாதியாய்*

என்று முன்றனக் கெங்கள்மேல் இரக்கம் எழாததெம் பாவமே. 2

குண்டு நீருறை கோளரீ! மதயானை கோள்விடுத்தாய்! *உன்னைக்

கண்டு மாலுறு வோங்களைக் கடைக்கண்களா லிட்டு வாதியேல்*

வண்டல் நுண்மணல் தெள்ளியாம் வளைக்கைகளால் சிரமப்பட்டோம்*

தெண்டிரைக் கடற்பள்ளியாய்! எங்கள் சிற்றில் வந்து சிதையேலே. 3

பெய்யு மாமுகில் போல்வண்ணா! உன்றன் பேச்சும் செய்கையும்* எங்களை

மைய லேற்றி மயக்க வுன்முகம் மாயமந்திரந் தான்கொலோ*

நொய்யர் பிள்ளைக ளென்பதற் குன்னை நோவநாங்கள் உரைக்கிலோம்*

செய்ய தாமரைக் கண்ணினாய்! எங்கள் சிற்றில் வந்து சிதையேலே.
4

வெள்ளை நுண்மணல் கொண்டு சிற்றில் விசித்திரப்பட* வீதிவாய்த்

தெள்ளி நாங்கள் இழைத்த கோலம் அழித்தியாகிலும் உன்றன்மேல்*

உள்ள மோடி யுருகல் அல்லால் உரோடம் ஒன்றுமிலோங் கண்டாய்*

கள்ளமாதவா! கேசவா! உன்முகத்தன கண்க ளல்லவே. 5

முற்றிலாத பிள்ளைகளோம் முலைபோந்திலா தோமை* நாடொறும்

சிற்றில் மேலிட்டுக் கொண்டுநீ சிறிதுண்டு திண்ணென நாமது

கற்றிலோம்* கடலை யடைத்தரக்கர் குலங்களை முற்றவும்

செற்று* இலங்கையைப் பூசலாக்கிய சேவகா! எம்மை வாதியேல். 6

பேதம்நன்கறி வார்களோடு இவைபேசினால் பெரிதின்சுவை*

யாது மொன்றறி யாத பிள்ளைக ளோமை நீநலிந் தென்பயன்?*

ஓதமா கடல்வண்ணா! உன்மண வாட்டிமாரொடு சூழறும்*

சேதுபந்தம் திருத்தினாய் எங்கள் சிற்றில் வந்து சிதையேலே. 7

வட்ட வாய்ச்சிறு தூதையோடு சிறுசுளகும் மணலுங் கொண்டு*

இட்டமா விளையாடு வோங்களைச் சிற்றிலீடழித் தென்பயன்?*

தொட்டு தைத்து நலியேல் கண்டாய் சுடர்ச்சக்கரம் கையி லேந்தினாய்!*

கட்டியும்கைத் தாலின்னாமை அறிதியேகடல் வண்ணனே!. 8

முற்றத்தூடு புகுந்து நின்முகங் காட்டிப் புன்முறு வல்செய்து*

சிற்றிலோ டெங்கள் சிந்தையும் சிதைக்கக் கடவையோ? கோவிந்தா!*

முற்ற மண்ணிடம் தாவி விண்ணுற நீண்டளந்து கொண்டாய்!* எம்மைப்

பற்றி மெய்ப்பிணக் கிட்டக் காலிந்தப் பக்கம் நின்றவர் என்சொல்லார்? 9

சீதை வாயமுதம் உண்டாய் எங்கள் சிற்றில் நீசிதை யேல்என்று*

வீதிவாய் விளையாடு மாயர் சிறுமியர் மழலைச் சொல்லை*

வேத வாய்த்தொழி லார்கள்வாழ் வில்லி புத்தூர்மன்விட்டு சித்தன்றன்*

கோதை வாய்த்தமிழ் வல்லவர் குறைவின்றி வைகுந்தம் சேர்வரே.

இரண்டு மதிப்பெண் வினாக்கள்.

1.ஆறாம் திருமொழி யாருடையது? நாச்சியார் திருமொழி யாரால் இயற்றப்பட்டது?

2. பெரியாழ்வார் குறிப்பு?

3. மூன்றாம் திருமுழியை இயற்றிய இருவர் யார்?

4. நம்மாழ்வருக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாது?

5. ஆண்டாள் இயற்றிய இரு நூல்கள்?

6.தாலப்பருவம் இயற்றியவர் யார் ?

7.பெரியாழ்வார் இயற்றிய நூல்கள் யாவை?

8.நம்மாழ்வார் கூறும் செய்தி யாது?

9.கோள்கள் எத்தனை அவை யாவை?

10.குலசேகர ஆழ்வார் இயற்றிய நூல்கள் இரண்டினை எழுதுக.

ஐந்து மதிப்பெண் வினாக்கள்.

1. மாணிக்கம் கட்டி வயிரம் இடைகட்டி என தொடங்கும் பாடல் வரியை எழுதுக?

2.சாழல் கூறும்கருத்தினை தொகுத்து எழுதுக?

3.ஆழ்வார்கள் கண்ணனைக் கொஞ்சுவது எங்கனம்?

4.ஆண்டாள் கூறும் செய்தி யாது?

5.பெரியாழ்வார், குலசேகர ஆழ்வார் குறிப்பு எழுதுக.

பத்து மதிப்பெண் வினாக்கள்.

1.கண்ணனை பாவித்து பெரியாழ்வார் எவ்வாறு தாலாட்டுகிறார்?

2.முன்றாம் திருமொழியில் பெரியாழ்வார் (ம) நம்மாழ்வார் கூறும் செய்தி யாது?

**மேலும் தகவலுக்கு,**

1. சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த தேவாரம், ஏழாம் திருமுறை, தலைமுறை குறிப்புகள் கி. வா ஜெகநாதன், பதிப்பாசிரியர் டி எம் குமரகுருகரன் பிள்ளை அவர்கள், திருப்பனந்தாள், ஸ்ரீ காசி மடம். 1958.

2. https://www.prapatti.com/slokas/tamil/naalaayiram/periyaazvaar/periyaazvaartirumozi.pdf